TITAN
COMPANY

டைட்டன் கம்பெனி லிமிட்டெட்
CIN: L74999TZ1984PLC001456
பதிவு அலுவலகம்: 3, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ்,
ஓசூர்-635 126. தமிழ்நாடு.
e-mail: investor@titan.co.in, தொலைபேசி: +91-80-6704 7000
Website: www.titan.co.in
A **TATA** Enterprise

## 34-வது ஆண்டு பொதுக் கூட்டம், மின்னணு வாக்களிப்பு தகவல்கள் மற்றும் பங்கு பதிவு முடிப்பு பற்றிய அறிவிப்பு

1. இந்த நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டு பொதுக் கூட்டம் (AGM), AGM-யின் அறிவிப்பில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, வணிக பரிமாற்றத்தை மேற்கொள்ள 3, சிப்காட் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ், ஓசூர்- 635 126 என்கிற முகவரியில் ஆகஸ்டு 3, 2018 வெள்ளிக்கிழமையன்று மாலை 2.30 மணிக்கு நடைபெற உள்ளது.

2. இந்த நிறுவனத்தின் 2017-18-க்கான ஆண்டறிக்கை, AGM-யின் அறிவிப்புடன் சேர்த்து ஜூலை 7, 2018 அன்று டெப்பாசிட்டரிகள் அளித்த உறுப்பினர்களின் மின்னஞ்சல் முகவரிகளுக்கும், நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் மின்னஞ்சல் முகவரிகளுக்கும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டது. தங்களின் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு ஜூலை 7, 2018 அன்று, அனுமதிக்கப்பட்ட முறையில் அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் அனைத்தும் www.titan.co.in என்கிற நிறுவனத்தின் வலைத்தளத்திலும் கிடைக்கின்றன

3. அவ்வப்போது திருத்தப்படுவதற்கு ஏற்ப நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014-ன் விதி 20 மற்றும் பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளியிடல் தேவைகள், கட்டுப்பாடுகள், 2015-ன் விதி 44 ஆகியவற்றுடன் நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 108-க்கு இணங்க, மின்னணு வாக்கு முறையைப் பயன்படுத்தி டெப்பாசிட்டரி லிமிட்டடால் (NSDL) வழங்கப்பட்டிருக்கும் AGM-யின் இடத்திலிருந்து மட்டுமல்லாமல் வேறு இடத்திலிருந்தும் AGM-ன் ('வெகுதூர மின்னணு வாக்குப்பதிவு') அறிவிப்பில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களுக்கும் வாக்குகளைப் பதிவு செய்யும் வசதி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது போன்ற வாக்களிப்பின் மூலம் வணிகப் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படலாம்.

I) மின்னணு வாக்களிப்பு காலம் ஜூலை 31, 2018, செவ்வாய்கிழமையன்று காலை 9 மணிக்கு துவங்கி ஆகஸ்டு 2, 2018, வியாழக்கிழமையன்று மாலை 5 மணிக்கு முடிவடைகிறது. இந்தக் காலத்தில், உறுப்பினர்கள் அவர்களின் வாக்கை மின்னணு மூலம் பதிவு செய்யலாம். இந்த மின்னணு வாக்களிப்பு முறையை NSDL அதன்பிறகு செயலிழக்கச் செய்துவிடும்.

II) உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமைகள் ஜூலை 27, 2018 ("இறுதி தேதி") அன்று நிறுவனத்தின் செலுத்திய சரிவொப்பு பங்கு மூலதனத்தில் அவர்களுக்குள்ள சரிவொப்பு பங்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப இருக்கும். இறுதி தேதி அன்று நிறுவனத்தின் உறுப்பினராக இருக்கும் எந்தவொரு நபருக்கும் வெகுதூர மின்னணு வாக்களிப்பைப் பயன்படுத்தி அல்லது AGM-யில் வாக்களிப்பதன் மூலம் AGM-ன் அறிவிப்பில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களுக்கும் வாக்களிக்க தகுதி உள்ளது.

III) மின்னணு வாக்களிப்பு முறை அல்லது வாக்குச் சீட்டைப் பயன்படுத்தி வாக்களிக்கும் வசதியும் AGM-யில் செய்யப்பட்டுள்ளது. வெகுதூர மின்னணு வாக்களிப்பு மூலம் ஏற்கனவே வாக்கினைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள் AGM-யில் அவர்களின் வாக்குரிமையை நிறைவேற்ற முடியும். AGM-யிற்கு முன் வெகுதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் AGM-யில் கலந்து கொள்ளலாம். ஆனால், மீண்டும் வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை.

IV) AGM-ன் அறிவிப்பு வந்த பிறகு பங்குகளைக் கையகப்படுத்தி, உறுப்பினராகி, இறுதி தேதியன்று பங்குகளை வைத்திருக்கும் நபர் e-voting@nsdl.co.in க்கு ஒரு வேண்டுகோளை அனுப்பி லாக் இன் ID-யையும் பாஸ்வேர்டையும் பெறலாம். ஆயினும், அந்த நபர் வெகுதூர மின்னணு வாக்களிப்பிற்கு NSDL-யிடம் ஏற்கனவே பதிவு செய்திருந்தால், வாக்கினைப் பதிவு செய்ய ஏற்கனவே உள்ள பயனர் ID-யும் கடவுச்சொல்லும் பயன்படுத்தப்படலாம்.

V) வெகுதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வாக்குச் சீட்டு குறித்த விவரங்களுக்கு, AGM-யின் அறிவிப்பைப் பாருங்கள். மின்னணு முறையில் வாக்களித்தல் தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) என்பதையும், www.evoting.nsdl.com யில் பதிவிறக்கம் பகுதியில் உள்ள, பங்குதாரர்களுக்கான மின்னணு வாக்களிப்பு பயனர் கையேடு என்பதையும் பாருங்கள் அல்லது 1800-222-990 என்கிற இலவச எண்ணில் NSDL தொடர்பு கொள்ளுங்கள். மின்னணு முறையைப் பயன்படுத்தி வாக்களிக்கும் வசதி தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால், செல்வி. பல்லவிமாத்ரே, துணை மேலாளர், NSDL, 4-வது தளம், 'A' விங், ட்ரேட் வேர்ல்ட், கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பப்பட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400 013 என்கிற முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள். மின்னஞ்சல்: rajivr@nsdl.co.in, தொலைபேசி எண்: 91 22 2499 4545/1800 222 990.

VI) கூட்டத்தில் பங்கேற்கவும், வாக்களிக்கவும் உரிமையுள்ள நபர்கள் நேரிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியை நிகராளியாக வைத்தோ வாக்களிக்கலாம். ஆனால், கூட்டத்தில் பங்கேற்கவும் வாக்களிக்கவும் உரிமையுள்ள நபரால் அனைத்து நிகராளிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட படிவம் / அதிகாரமளிப்பு படிவத்தில் கையெழுத்திட்டு கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணி நேரத்திற்குள் நிறுவனத்தின் பதிவு பெற்ற அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. இயக்குனர்கள் நிறுவனத்தின் வரவிருக்கும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் அனுமதிக்காக நிறுவனத்தின் ஒவ்வொரு 1 ரூபாய் சரிவொப்பு பங்கிற்கும் 3.75 ரூபாய் லாபப் பங்கைப் பரிந்துரைத்துள்ளனர்.

5. கடமைகளைப் பட்டியலிடல் மற்றும் தேவைகளை வெளியிடல், கட்டுப்பாடுகள், 2015-ன் விதி 42 உடன் நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 91-ன் விதிகளுக்கு ஏற்பவும் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. இதன்படி AGM-ல் அறிவிக்கப்பட்டால் AGM-க்காகவும் லாபப் பங்கை செலுத்துவதற்காகவும் உறுப்பினர்களின் பதிவேடு மற்றும் நிறுவனத்தின் பங்கு பரிமாற்ற பதிவேடுகள் ஜூலை 25, 2018, புதன்கிழமை முதல் ஆகஸ்டு 3, 2018 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடியிருக்கும்.

டைட்டன் கம்பெனி லிமிட்டடிற்காக

ஜூலை 9, 2018
பெங்களூரு

பாஸ்கர் பட்
நிர்வாக இயக்குநர்

TANISHQ | TITAN | fastrack | ZOYA | SKINN by TITAN | TITAN eyeplus